O.S. No.15/2024

24.03.2025

**வா.சா. 2**

**திரு சௌந்தரராஜன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் பிறந்து வளர்ந்தது வைப்பூர் அருகில் உள்ள சின்ன கிராமத்தில். வாதி கடந்த 5 ஆண்டுகளாக எனக்கு பழக்கம். நான் ஒப்பந்த தொழில் செய்து வருகிறேன். பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதி திருவாரூரில் இருப்பதால் எனக்கு தெரியும். வாதி திருவாரூர் நகரில் அலுவலகம் வைத்து பைனான்ஸ் தொழில் செய்து வரும் விபரம் எனக்கு நன்கு தெரியும். அடிக்கடி வாதியின் அலுவலகத்திற்கு பிரதிவாதி வந்து போவார் தெரியும். 30.05.2023 அன்று ரவிசங்கர் அலுவலகத்திற்கு பிரதிவாதி வந்து ரூ.10,00,000/- ரொக்கமாக வாங்கி சென்றார். ரவிசங்கர் அலுவலகத்திற்கு பிரதிவாதி வந்தபோது நான் அலுவலகத்தில் இருந்தேன். எத்தனை நபருடன் வந்தார் என்பது எனக்கு தெரியாது. 500 ரூபாய் கட்டுகள் எத்தனை கட்டுகள் கொடுத்தார் என்று எனக்கு

தெரியாது. நான் சொல்லும் தேதியில் பாண்டியராஜன் வாதியின் அலுவலகத்திற்கு வரவே இல்லை எனவும் ரவிசங்கர் என் குடும்ப நண்பர் என்பதால் பொய்யாக சொல்கிறேன் எனவும் சொன்னால் தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி, வாதியின் வீட்டில் வைத்து ரூ.10,00,000/- வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. கடனுறுதி ஆவணத்தில் உள்ள விபரம் எதுவும் தெரியாது எனவும் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணத்தில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.03.24 14:26:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.